ஸ்ரீ திரிபுரஸுந்தரீஸமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவராயநம:

# ஆர்யதர்மம்.

अतिस्थेमस्फीतानपि शिखरिणः पश्य चलितान्
कियन्तं वा कालं किसलयमृदु स्थास्यति वपुः ।
असारेऽस्मिन् पूजां मयि हृदय शंभोर्न कुरुषे
कदेहक्तेलभ्यं कथय जड तत्रोपकरणम् ॥

𑌅𑌤𑌿𑌸𑍍𑌥𑍇𑌮𑌸𑍍𑌫𑍀𑌤𑌾𑌨𑌪𑌿𑌶𑌿𑌖𑌰𑌿𑌣𑌃 𑌪𑌶𑍍𑌯 𑌚𑌲𑌿𑌤𑌾𑌨𑍍
𑌕𑌿𑌯𑌨𑍍𑌤𑌂 𑌵𑌾 𑌕𑌾𑌲𑌂 𑌕𑌿𑌸𑌲𑌯𑌮𑍃𑌦𑍁 𑌸𑍍𑌥𑌾𑌸𑍍𑌯𑌤𑌿 𑌵𑌪𑍁𑌃 ।
𑌅𑌸𑌾𑌰𑍇𑌽𑌸𑍍𑌮𑌿𑌨𑍍 𑌪𑍂𑌜𑌾 𑌮𑌯𑌿 𑌹𑍃𑌦𑌯 𑌶𑌂𑌭𑍋𑌰𑍍𑌨𑌕𑍁𑌰𑍁𑌷𑍇
𑌕𑌦𑍇𑌹𑌕𑍍𑌤𑍇𑌲𑌭𑍍𑌯𑌂 𑌕𑌥𑌯 𑌜𑌡 𑌤𑌤𑍍𑌰𑍋𑌪𑌕𑌰𑌣𑌮𑍍 ।

ஹே ஹ்ருதய ! ஹே ! மனமே மிகவும் கடினமாயும் பெருத்தும் நன்கு பிடிப்புள்ளவைகளுமான மலைகள்கூட அகஸ்தியர் ஷண்முகர் முதலானவர்களால் பேதிக்கப்பட்டிருக்கின்றனவென்பதை நீ கவனிக்கவேண்டும். அதிகப்பிடிப்புள்ள திருடமான பர்வதங்களின் நிலைமையே இவ்விதமிருக்கும்போழுது இளம் தளிர்போல் அதிக மிருதுவான இந்தச் சரீரமானது எவ்வளவுகாலம் ஸ்திரமாயிருக்கப் போகின்றது. அற்பங்கூட சுகமில்லாமல் கொடிய கஷ்டங்களுக்குக் காரணமான இந்த ஸம்ஸாரத்தைப் பெரிதாய்க் கருதி ஸ்ரீ சங்கரரைப்பூஜிக்காமலிருப்பாயாகில் ஹே அறிவில்லாதவனே இனி எந்த ஸமயம் பரமேசுவர பூஜைக்கு ஸௌகரியமான இவ்விதஸாதனம் கிடைக்கப்பேர்கின்றது. நீயே நன்றாய் ஆலோசித்துபபார்.

ஸ்ரீ பகவானை நன்கு ஆராதித்து அவருடைய அனுக்கிரகத்தால் அடிக்கடி ஜனனமரணதுக்கததிற்குக்காரணமான ஸம்ஸாரதுக்கத்தைப்போக்கிச் சிறந்ததான மோக்ஷமென்கிற ஸ்தானத்தைப் பெறத்தகுதியான இம்மானிட ஜன்மாவையும் கரசரணம் முதலான அவயவங்களையுமடைந்திருக்கும் இந்த சமயத்தில் நீ கவனிக்காமலனுதரவாயிருந்தால் இதற்குப்பிறகு உனக்கேற்படும் ஜன்மா இவ்விதமென்று சொல்லமுடியாது. மரமோ செடியோ மிருகமோ.பறவையோ அந்த ஸமயத்தில் பகவானை ஆராதிக்க வேண்டிய ஸாதனங்கள் ஸரியானபடி இல்லாதபடியால் ஒன்றும் பேசமுடியாது. ஆகையால் இந்த ஸமயத்திலேயே பகவானைப் பூஜித்து உத்தமமான ச்ரேயஸ்ஸைப் பெறவேண்டியது முக்கியம். சுபம்

உபபத்திராதிபர்,

662

ஆர்ய தர்மம்.
பிரபவ-௵ மார்கழி-௴ ௭௨

# துளஸி மஹிமை.

(694-வது பக்கத்தொடர்ச்சி)

ஒரு கிராமத்தில் வைதிகாசாரத்தைக் கடைப்பிடித்தொழுகும் சிறந்த அந்தண வம்சத்தில் தோன்றிய ஒரு வேதியன் தம் ஜாதிமதத்திற்குற்ற ஆசாரநெறிகளில் சற்றும் பற்றுதலற்றவனாய்க் கொண்டு பயிரிடும் தொழிலில் ஆவல்கொண்டு அத்தொழிலையே நடத்திவந்தான். ஒவ்வொரு நாளும் கானகத்திற்கேகி புற்கட்டுகளைக் கொண்டுவருவான். ஒருஸமயம் அரண்யத்தில் புல்லுக்காகச் செல்லுங்கால் அங்கு சிறு காய்களுடன் கூடிய சில துளஸிச்செடிகளைக் கண்ணுற்றான். அவைகளின் மஹிமையை இவன் அற்பமும் அறிந்தவனல்லன். ஆனாலும் அவைகளின் சிறந்த வாஸனையில் விருப்பங்கொண்டு அவைகளையும் பெற வேண்டுமென்கிற தோற்றமுண்டாயிற்று. இவைகளின் உபயோகத்தைப் பிறகு அறிஞர்கள் மூலமறிந்து பசுக்களுக்காவது அல்லது வேறு பிராணிகளுக்காவது எவ்விதமுபயோகப்படுத்தும்படி சொல்லுகிறார்களோ அவ்விதம் செய்வோம் என்று கருதி சில செடிகளை அப்புல்லோடு சேர்த்துக் கட்டினான். இந்த ஸமயத்தில் அவன் ஆயுளின் முடிவுகாலம் ஸமீபத்தில் வந்துவிட்டதெனக்கருதி யமனால் அனுப்பப்பட்டதுபோல ஒரு கிருஷ்ண ஸர்ப்பம் அந்தப் புற்கட்டில் ஒளிந்துகொண்டிருந்தது. இதை அவ்வேதியனறியான். துளஸிச்செடிகளைத் தம் சரீரத்தில் தரித்துக்கொண்டிருக்கும்வரையில் அவனைத்தீண்ட இவ்வரவத்திற்குச் சக்தியில்லை. எச்சமயம் இவன் தன் சிரஸ்ஸிலிருக்கும் துளஸிக் கட்டை கீழே போடுவானோ அச்சமயம் தமது செய்கையைக் காண்பிக்கவேண்டுமென்கிற எண்ணத்துடன் ஸமயத்தை எதிர்பார்த்திருந்தது. அவ்வந்தணனும் புல்லுக்கட்டைத் தலையில் சுமந்துகொண்டு வழக்கம்போல் வனத்திலிருந்தும் தன்னில்லத்

திற்கேகினுன். இந்தப் பிராமணன் வீட்டிற்கு அருகிலுள்ள வரும்

दिनमनु तुलसीपत्रैर्भक्त्या भगवन्तमिन्दिराकान्तम् ।
भक्तानुग्रहतत्परमागमवेद्यं समर्चयन्नास्ते ॥

[illegible]
[illegible]

ஒவ்வொருநாளும் ஸ்ரீ லக்ஷ்மீபதியாயும் படைத்தல் காத்தல் அழித்தல் என்கிற முக்கர்மாக்களுக்குமிருப்பிடமாயும் மூன்று காலங்களையும் நன்கறிந்தவராயும் பக்தர்களுக்கு அனுக்கிரஹம் புரிவதில் நோக்கமுடையவராயும் வேதங்களால் அறியத்தகுந்தவராயும் விளங்கும் ஸ்ரீ மஹாவிஷ்ணுவை துளஸீபத்திரங்களால் மிகவும் பக்தியுடன் நன்கு ஆராதிக்கிறவரும் தமது தர்மங்களை நன்கு அனுஷ்டிப்பவருமான ஒரு பிராமண சிரேஷ்டர் தமக்கு முன் சொல்லுகிற இவன் தலையிலிருக்கும் கிருஷ்ணஸர்ப்பத்தால் சுற்றப்பட்டிருக்கும் புல்லுக்கட்டையும் இவனுடன்கூடப் பின் பக்கமாகப் போகும் யமதூதர்களையும் ஈசனருளால் பார்த்து எதற்காக நீங்கள் இவனைப் பின்பற்றுகிறீர்களென்று வினவினர். உடனே அவர்கள் கிருஷ்ணஸர்ப்பத்தின் முகமாக இவன் பிராணனை அபகரித்து இவனை யமலோகத்திற்குக் கொண்டுபோக வேண்டி நாங்கள் பின் தொடருகிறோம். துளஸிச்செடிகளை அவன் தூக்கிக்கொண்டிருப்பதால் இப்பொழுது ஒன்றும் செய்ய முடியவில்லை. அந்தச்செடிகளை எப்பொழுது கீழே போடப்போகிறனென்று ஸமயத்தை எதிர்பார்த்துக்கொண்டு பின்செல்லுகிறோமென்று விடை பகர்ந்தார்கள். இவ்வசனத்தைச் செவியுற்ற அவ்வேதிய சிரோமணி மிகவும் மனவருத்தத்துடன் ஆலோசிக்கின்றார்.

परोपकारार्थमिदं शरीरमित्यार्यवर्याविशदं वदन्ति ।
अस्मात्परश्चोपकृतेर्नमुख्यः कालोहि कुर्मोहितमस्य किंवा ॥

[illegible]
[illegible]

மிகவும் அறிவாளிகளான மஹான்கள் பிறருக்குதவி புரிய வேண்டியே இம்மானிட சரீரமேற்பட்டிருக்கின்றதென்றும் அவ்விதமே தம்மாலியன்றவரையில் அவச்யம் செய்யவேண்டுமென்று ஸ்பஷ்டமாய்க் கூறியிருக்கிறார்கள். உபகாரம் செய்வதற்கு இந்த ஸமயத்தைக்காட்டிலும் சிறந்த காலம் வேறு கிடையாது. ஆகையால் இவனுக்கு இந்த ஸமயம் நாம் எவ்விதம் உபகாரம் செய்கிறது. இவனுக்கேற்பட்டிருக்கும் இந்த ஆபத்தை எவ்விதத்திலும் போக்கவேண்டுமென்று கருதி அதற்குத் தகுந்த உபாயம் ஒன்றும் தோன்றாமல் அருகிலிருக்கும் எமகிங்கரர்களையே இதற்கு என்ன செய்யலாமென்று வினவினர். அவர்கள் ஹே! த்விஜகுலத் தலைவனே! என்று அவ்வேதியரை ஸம்போதனம் செய்து ஒவ்வொரு நாளும் துளஸிதளங்களால் ஸ்ரீ பகவானை அர்ச்சித்து உம்மால் எவ்வளவு புண்யம் ஸம்பாதிக்கப்பட்டிருக்கின்றதோ அந்தப்புண்யத்தை இவனையும்பொருட்டுக் கொடுத்தால் இந்த ஆபத்திலிருந்தும் இவன் விலகுவான் என்று கூறினார்கள். இம்மொழியைச் செவியுற்ற அவ்வந்தண சிரோமணியும்

आपन्नार्तिप्रशमनफलास्संपदो ह्युत्तमानाम् ।

𑌆𑌪𑌨𑍍𑌨𑌾𑌰𑍍𑌤𑌿𑌪𑍍𑌰𑌶𑌮𑌨𑌫𑌲𑌾𑌸𑍍𑌸𑌂𑌪𑌦𑍋 𑌹𑍍𑌯𑍁𑌤𑍍𑌤𑌮𑌾𑌨𑌾𑌮𑍍 ।

தம்மைச் சரணமடைந்தோர்களுக்கு ஏற்பட்டிருக்கும் கஷ்டத்தைப் போக்குவதே பெரியோர்களின் ஸம்பத்திற்குப் பயன் என்று சான்றோர் சாற்றியுள்ள நீதியையுணர்ந்து தமக்கும் பரோபகாரம் செய்வதற்குற்ற தகுந்த ஸமயம் கிடைத்ததே என்று அடங்கா மகிழ்ச்சியுடன் தம் புண்யத்தை அந்தப்பிராமணனையும் பொருட்டு அர்ப்பணம்செய்து அவனைப் பாதுகார்த்தார். உடனே புல்லுக்கட்டைச் சுமந்துவந்த பிராமணன் இங்கு நடந்த ஸகல ஸமாசாரங்களையும் இவ்வேதியர் வாயிலாக அறிந்து அன்று முதல் ஒவ்வொரு தினமும் நியமமாக துளஸீதளங்களால் ஸ்ரீமந் நாராயணமூர்த்தியைப் பூஜித்து முடிவில் உத்தமமான பதவியைப் பெற்றான். ஆகையால் இவ்வித மஹிமை வாய்ந்த இந்தத்துளஸியை நாமும் நம்மாலியன்றவரையில் விருத்திசெய்தும் பகவானுக்கு அர்ச்சனை செய்தும் ஜன்மஸாபல்யத்தைப் பெறவேண்டி முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டியது முக்கியம்.

உபபத்திராதிபர்.

# ஸநாதன மானவ தர்மம்.

(704-வது பக்கத்தொடர்ச்சி)

सत्यं ब्रूयात्प्रियं ब्रूयान्न ब्रूयात्सत्यमप्रियम् ।
प्रियं च नानृतं ब्रूयादेष धर्मस्सनातनः ॥ मनुः ॥

ஸத்யம்ப்ரூயாத்ப்ரியம்ப்ரூயாந்நப்ரூயாத்ஸத்யமப்ரியம்।
ப்ரியம்சநாந்ருதம்ப்ரூயாதேஷதர்மஸ்ஸநாதந: । மநு: ।

எப்பொழுதும் மனிதர்கள் உண்மையே கூறவேண்டும். பிரியமாய் (இனிமையாக) பேசுதல் வேண்டும். ஸந்தோஷமில்லாத வார்த்தைகளை ஒருபோதிலும் பேசலாகாது. எக்காலத்திலும் பொய் சொல்லலாகாது. இதுதான் வேதங்களைப் பிரமாணமாகக் கொண்ட ஸ்மிருதியின் தர்மம் என்றார். — உதாஹரணமாக முன்னொரு காலத்தில் பிரும்மா விஷ்ணு மஹேச்வரர்களுள் கலஹமேற்பட்டு மஹேச்வரருடைய சிரஸ்ஸையும் பாதத்தையும் ஒருவராலும் பார்க்கமுடியாதென்று உரைக்கும்போது விஷ்ணுவானவர் பாதத்தைப் பார்த்துவருவதாகவும் பிரம்மாவானவர் சிரஸ்ஸைப் பார்த்துவருவதாகவும் ஒப்புக்கொண்டு விஷ்ணுவானவர் வராஹரூபமும் பிரம்மாவானவர் ஹம்ஸரூபமும் எடுத்துக்கொண்டு தேட ஆரம்பித்தனர். பிரம்மாவானவர் வெகு தூரம்தேடி ஈசனுடைய சிரஸ்ஸைப் பார்க்க முடியாமல் திரும்பி சிரஸ்ஸைப்பார்த்தேனென்று ஒரு பொய் கூறினாரும். இதையறிந்த பகவான் பிரும்மாவைநோக்கி நீர் என் சிரஸ்ஸைப் பார்க்காமல் பார்த்ததாய் கூறியபடியால் உமக்குப் பூஜையில்லாமல் போகட்டுமென சாபங் கொடுத்தார்களென்று புராணங்களில் கூறப்பட்டிருக்கிறது. (திருக்கண்டியூர் திருவையார் ஸமீபம்.) முதலிய க்ஷேத்திரங்களில் பிரும்மன்கோவில்களிருந்தபோதிலும் பிரும்மாவைத் தவிர இதர தேவதைகளுக்கு விசேஷமான பூஜைகள் நடப்பதேயன்றி அவருக்கு நடப்பதாகத் தெரியவில்லை. இதற்கு யாது காரணமென யோஜிக்குமளவில் இவரால்சொல்லப்பட்ட அஸத்யத்தைத் தவிர வேறு காரணம் கூறவியலாது. ஸ்ருஷ்டி, ஸ்திதி முதலிய கர்மாக்களைச் செய்யத்திறமை வாய்ந்த தேவருக்கும் இவ்விதம் அனர்த்தம் நேரிடுமாகில் நம்மைப்போன்ற பசுக்களின் கதியாதே

ன்பதை உரைக்கவும் வேண்டுமா? ஆகையால் பொய் சொல்வது ஒரு தீமையான கார்யமென்பது வெளிப்படையானது.

இவ்விதம் அஸத்தியத்தை மூன்றுவிதமாகப் பிரிக்கலாம். ஒருவன் தனக்கும் பிறருக்கும் ஏற்பட்டிருக்கும் விரோதத்தால் அவனை சிக்ஷிக்கவேண்டுமென அவன் சொல்லாத பொய்யை சொல்லியதாகச் ஸாதிப்பது. 2. தான் நேரில் செய்யாமல் தன் வேலையாள்களைக் கொண்டு செய்யும்படிச் சொல்லுவது. 3. ஒருவருடைய அனுமதியன்றி அவர்களுக்குப் பொய்சாக்ஷி முதலியவைகள் சொல்லிப்பிறகு உங்கள்விரோதிக்காக இவ்விதம் சொன்னேன் என்பதைக்கேட்டு ஆனந்திப்பது. இவ்விதமான அஸத்யங்களிலிருந்தும் விலகவேண்டும். ஸத்ஸங்கத்தில் அமரவேண்டும். ஸாதுக்களிடம் நம்பிக்கை வேண்டும். கடவுளை நம்பவேண்டும்.

योयथासन्तमात्मानं अन्यथासत्सुभाषते ।
स पापकृत्तमोलोके तेन आत्मापहारकः ॥ मनुः ।

யோயதாஸந்தமாத்மாநம் அந்யதாஸத்ஸுபாஷதே ।
ஸபாபக்ருத்தமோலோகே தேந ஆத்மாபஹாரக: । மநு:

எவன் பெரியோர்களாகிய ஸாதுக்களிடத்தில் இருக்கும் குணகணங்களை உள்ளபடியல்லாமல் வேறுவிதமாக மாற்றிக்கூறுகிறானோ அவன் கொடிய பாபங்களைச் செய்தவனாகவும் ஆத்மாவை அபஹரித்த திருடனாகவும் ஆகிறான். திருடன் திரவ்யத்தைத் திருடுகிறான். இவன் பிரதானமாயுள்ள ஆன்மாவையே அபஹரிக்கிறான் என்றார். ஸூர்யவம்சத்திலுதித்த ஹரிச்சந்திரமஹாராஜன் ஓர் பொய் சொல்வதற்குப் பயந்து தனக்கு முக்கியமான இராஜ்யம், பத்நி, புத்திரன் முதலியவைகளையும் தியாகம் செய்வதான ஸாஹஸகர்மாவைச் செய்தும் இன்னும் அதிபயங்கரமாயும் பிறரால் நிந்திக்கக் கூடியதுமான மயானத்தில் சவம் காப்பது முதலிய வேலைகளைச் செய்வதாக ஒப்புக்கொண்டும் எவ்வித தொழிலும் செய்யலாம். ஆனால் பொய்மட்டும் கூடாதென்ற தீர்மான எண்ணத்துடன் இருந்து ஸத்யவாக்ய பரிபாலனத்தினால் முன்போல் ராஜ்யம், பத்நி, புத்திரன் முதலிய பாக்கியங்களை மறுபடியும் அடைந்தார் என்ற கதை உங்கள் செவிகளில் விழுந்திருக்கலாம். ஆகையால் ஆரியர்களாகிய நாம் யாவரும் ஸத்தி

யத்திலிருந்து தவராமலும் ஸத்ஸங்கங்களில் பழகி அவர்களுடைய சேர்க்கையால் சுருதிஸ்மிருதிகளில் நம்பிக்கை கொண்டு சாஸ்திரப்படி நடப்போமாகில் இவ்வுலகில் அதிகமான மஹிமையும் தபஸ் ஸித்தியால் அடையக் கூடிய மோக்ஷமார்க்கத்திற்குக் காரணமான ஈசுவரப்ரஸாதத்தையும் ஸகல ச்ரேயஸ்ஸையும் அடைய முடியுமாகையால் இவ்விதம் செய்து எல்லோரும் க்ஷேமத்தை அடையவேண்டப்படுகிறது. சுபம்!

अमृतं किरति हिमांशुर्विषमेव फणीसमुद्गिरति ।
गुणमेववक्ति साधुर्दोषमसाधुः प्रकाशयति ॥

அம்ருதம் கிரதி ஹிமாம்சுர் விஷமேவ ஃபணீஸமுத்கிரதி ।
குணமேவவக்தி ஸாதுர்தோஷமஸாது: ப்ரகாசயதி ॥

கே, ஆர். வைத்தியநாதசாஸ்திரிகள்,

---

## ஓர வேண்டுகோள் & வர்ணாச்ரம தீர்மானம்.

ஆஸ்திகசிகாமணிகளாகிய சந்தாநேயர்காள்:—

சென்ற அற்பசிமீ 25உ வெளிவந்த "ஆர்யதர்மத்தின்' 630-வது பக்கத்தில் 18-முதல் 23 வரையிலுள்ள வரிகளில் எழுதியிருக்கிறபடி ஆங்காங்கு ஒரு வர்ணாச்ரமசபை நடத்தியும், நமது சென்னை வர்ணாச்ரமசபைக்குத் தங்களால் இயன்ற மட்டிலும் பண உதவியும் செய்யும்படி முயற்சியெடுக்க வேண்டுமென்று மிக்கத்தாழ்மையாகக் கேட்டுக்கொள்கிறேன். நிற்க திருவாங்கூர் ஸமஸ்தானம் கொட்டாரக் கரையில் "ஹரிஹரபக்த சமாஜ" வர்ணாச்ரம தீர்மானத்தை இதன் மூலமாய்த் தெரியப் படுத்திக் கொள்கிறேன்.

நமது முன்னோர்களாலும் நம்மாலும் அனுஷ்டித்து வருகிற ஸநாதன தர்மமானது சமுத்திரத்தின் நடுவில் புயல் காற்றில் அகப்பட்ட கப்பலானது எவ்விதம் கரை சேருவோம் எனத்தவிப்பதுபோல தவித்து நிற்கின்றது. அதை நாம் இப்போது கவனியாமல் இருந்தால் நமது ஸநாதனதர்மமானது நவீன வித்வான்களாகிய் துராத்மாக்களின் பிரசாரப்புயல்காற்றினால் அடிக்கப்பட்டு பாழடைந்துவிடும். வேதம், சாஸ்திரம், இதிஹாஸம், புராணம், இவைகள் சமுத்திரத்தின் நடுவே ஆழமான இடத்தில் தரை

மட்டத்தில் இருக்கப்பட்ட நல்முத்துபோல் மறைந்திருக்கிறது. நல்முத்துக்கு ஒப்பான நமது ஸநாதனதர்மத்தை நவீனபண்டிதர்கள் அதன்மஹிமையைச் சிறிதும் அறியாமல் எளிதில் நசிக்கச் செய்கிறார்கள். இவர்களோ தங்களுடைய தர்மமார்க்கத்தை அநாகரீகமாகவும் அகௌரவமாகவும் கருதுவதும் போதாமல் அதன்படி நடக்கக்கூடாது என்று பேசியும் வருகிறார்கள். இம்மஹான்கள் நமது சட்டசபையில் இந்துமத ஸ்தானீகர் என்ற பட்டத்தில் நியமிக்கப்பட்டும் இருக்கிறார்கள். இவர்களுக்குத் தங்கள் மதத்தில் சிறிதும் பயிற்சியும், நம்பிக்கையும் இல்லை. இவர்கள் இம்மானிடப் பிறவியால் வேதசாஸ்திர தத்துவங்களை அறிவதற்குண்டான படிப்பாகிய ஸம்ஸ்கிருதத்தைப் படிக்கவில்லை. நவீன ஆங்கில வித்தியாப்பியாசத்தால் வேதாஹஸ்யங்களை அறிய இயலாது. அன்னிய நாட்டார் புத்திசாமர்த்தியத்தால் ஒன்றும் கண்டுபிடிக்கவில்லை. நமது தாய்நாட்டிலே இருந்து " ஸர் வில்லியம் போன்ஸ் " என்பவனால் கொண்டுபோகப்பட்ட "சூரிய சித்தாந்தம்" என்ற ஏட்டிலே இருந்து ஜியாமெட்டரி, அல்ஜிபரா முதலானவைகளைப்புஸ்தகரூபமாக வெளியிட்டார்களே தவிர வேறில்லை.

நாம் கும்பகர்ண சேவை (தூக்கம்) யில் இருந்ததால்தான் புராதன கிரந்தம் வெளியேறி விட்டது. அறிவுடைய பெரிய மஹான்களே! இனிமேல் நித்திரையிலே இருந்து எழுந்திருக்க வேண்டும். நமது ஸநாதநதர்மத்தைநிலைநிறுத்தச் சட்டசபையில் இந்து எனப்பொய்யான பெயரைத் தாங்கி நாற்காலி, காலியாகப் போய்விடாமல்நாகரீகமாக அலங்கரித்து தர்மஸ்தாபனம் செய்ய முன் வந்திருக்கிறார்கள். இப்பேர்ப்பட்ட இந்துவை இந்த இடத்திலே நாம் வைத்திருந்தால் ரோகத்தின் மூலகாரணம் அறியாத வைத்தியன் வியாதிக்கு வைத்தியம் செய்தால் என்ன பலன் கிடைக்கும்? அந்த பலனைப்போல நாம் அடைவோம். ஆகையால் இக் கலிகாலத்தில் சங்கர அம்சத்துடன் அவதரித்து மதாசார்ய ஸ்தானத்தை நன்கு அலங்கரித்தும் ஆங்காங்கு திக்விஜயம் செய்தும், ஸநாதன தர்மஸ்தாபனமும் செய்தும் வருகின்ற நமது ஆசார்ய பாதபூஜ்ஜியாள்தான் நமது தர்ம நீதிகளுக்குப்பொருப்பான மூலபுருஷர்களென்பது நிச்சயம். அவர்களைத் தவிர இம்மத விஷய நீதிபரிபாலனத்தில் வேறு ஒருவரும் சக்தர்கள் ஆக

மாட்டார்கள். நமது தர்மநியமங்களின் கூடுதல், குறைவு, நியாயம், அநியாயம், இவைகளை அடிக்கடி "உள்ளங்கை நெல்லிகனி போல்" உபதேசித்து வருகின்ற மதாசாரிய நியமனப்படி நாம் அவ்வழியில் நின்றும் சிறிதும் விலகாமல் பக்தி சிரத்தையுடனும் அநுஷ்டானத்துடனும் இருக்கவேண்டியது நமது கடமை.

(1) தற்காலம் சட்டசபையில் சில இந்துமத தர்ம நியமலங்கனம் செய்து மேன்மை அடையக்கருதி இருக்கும் இந்துமதத்தின் தத்வம் தெரியாதவர்களை இந்துமத பிரதிநிதி என்ற பட்டத்திலே இருந்து விலக்கி நமதுமதாசார்யாளுடைய பரிபூரண அநுக்கிரகம் பெற்ற வேதசாஸ்திர பண்டித வித்வான்களை சட்டசபையில் இந்து ஸநாதந தர்மத்தின் பொருட்டு நியமிக்கவேண்டும்.

(2) இந்து எனப்பெயர்தாங்கி சட்டசபையில் நவீன வித்தியாப்பியாசத்தால் அலங்கரித்துவரும் பிரதிநிதிகளை அந்த இடத்திலே இருந்து விலக்கவேண்டுமென நமது காருண்ய கவர்மெண்டாருக்கு ஒரு ரிபோர்ட்டு செய்துகொள்ளவேண்டும்.

(3) ஒவ்வொரு ஊரிலும் ஸநாதந தர்மத்தை முன்னுக்குக் கொண்டுவர முயற்சி செய்யவேண்டுமென "ஹரிஹரபக்த" ஸமாஜ மஹாஜனங்களின் ஓர் தாழ்மையான விக்ஞாபனத்துடன் ஆசாரிய பாத கமலத்தில் பக்தி சிரத்தா புரஸ்ஸரமாக சமர்ப்பணம் செய்யப்படுகிறது. ஸநாதந தர்மம் நிலைநிற்க ஓங்கார ஸ்வரூபமாகிய ஐங்கரன் நமக்கு அருள்புரிவானாக. சுபம்.

K. V. வீரமணி வாத்தியார்,
கொட்டாரக்கரை.

---

## கோவல் வீரட்டானம் பிராமண மஹாசபை.

### ஆர்யதர்மாபிவர்த்தனி ஸபை.

ஷை ஸபைகளின் சென்றவாரக்கூட்டம் நேற்று 11-12-27 நடைபெற்றது.

ஸ்ரீமஸ்ரீ பண்டித கோவிந்தாசார்யாளவர்கள் அக்கிராஸனத்தின் கீழ் அடியிற்கண்ட தீர்மானங்கள் ஸபையில் ஏகமனதாய் நிறைவேறின.

1. ஸநாதநதர்ம மார்க்கத்திற்குத் தற்போது நேர்ந்துள்ள விபரீத நிலையை உத்தேசித்து ஷை சபைகளின் சார்பாக இந்நக ரிலும் சுற்றுப்பக்கங்களிலும் வர்ணாச்ரம தர்மப் பிரசாரம் செய்ய வேண்டும் என்பது.

2. இந்நகர் பிராமண பிர்மசாரிகள் தங்கள் தங்கள் நித்ய கர்மானுஷ்டானங்களைக் கிரமமாகச் செய்துவர அவர்களுக்கு வேண்டிய எல்லாவிதமான உதவிகளும் செய்து இதுவரையில் நடத்திவந்ததை இன்னும் அவர்களுக்கு வேண்டிய மற்ற வேத பாடங்களைக்கற்பித்து விருத்திக்குக்கொண்டுவரவேண்டும் என்பது

3. சென்னையில் நடைபெறப்போகிற வர்ணாசிரமதர்ம மஹாஸபைக்குக் கீழ்கண்ட கனவான்களை பிரதிநிதிகளாக அனுப் பத் தீர்மானிக்கப்பட்டது

1. மகா-ா-ஸ்ரீ T. S. ராமச்சந்திரய்யர் அவர்கள்
2. ,, C. V. நாராயணசாமி அய்யர் அவர்கள்
3. ,, K. R. சுப்பிரமணிய சாஸ்திரிகள் அவர்கள்
4. ,, V. S. நடேசய்யர் அவர்கள்
5. ,, T. V. கண்ணையரவர்கள்

K. R. சுப்பிரமணிய சாஸ்திரி.

---

## கோயம்புத்தூர்ஜில்லா கோபிசெட்டிபாளையம் தாலூகா கூகலூர் வர்ணாச்ரம தர்மஸபையும் தீர்மானங்களும்.

ஷை ஸபையானது 12—12—27 மாலையில் 3-மணிக்கு பவானி பிர்மஸ்ரீ ஆத்மராம கனபாடிகள் அவர்கள் தலைமையின் கீழ் நடைபெற்றது.

ஷை சபைக்கு உள்ளூர் பிராமண சமூகங்களும் பிராமண ரல்லாதாரும் இதர கிராமவாசிகளும் கூடியிருந்தார்கள். ஸபை யின் சார்பாக வரவேற்புப் பத்திரம் வாசித்தளிக்கப்பட்டும் ஸ்ரீமான் K.K. சுப்பணக்கவுண்டரால் தத்காலம் வர்ணாசிரமஸபை கூட்டவேண்டிய அவசியத்தைப்பற்றியும் வர்ணதர்மம் என்கிற விஷயத்தையும் உபந்யஸிக்கவேண்டுமென்று அக்கிராஸனா

வேண்டிக்கொள்ள அக்கிராஸனர் வெகு அழகாக 3-மணி நேரம் வர்ணதர்மம் என்னும் விஷயத்தைப்பற்றி எடுத்துரைத்தார்.

மஹா-ா-ஶ்ரீ அருணாசல அய்யர் அவர்களால் வந்தனோபசாரம் சொல்ல சபை இனிது நடைபெற்றது.

ஷை சபையின் தீர்மானங்கள்.

(I) வர்ணாசிரம தர்மம் சீர்குலைந்தும் நாஸ்திக்யம் பரவி வரும் இந்நாளில் மதராஸில் "வர்ணாச்ரம தர்ம மஹாஸபை" தோன்றுவதைக்கேட்டு இச்சபை குதூஹலமடைகிறது.

(2) ஷை மஹாசபைக்கு பிரயத்தினம் எடுத்துக்கொண்டு உழைப்பவராகிய ஶ்ரீவத்ஸ ஸோமதேவசர்மாவிற்கு இஷ்டஸித்திகளை கொடுக்கவேணுமாய் எல்லாம்வல்லஇறைவனைவேண்டுகிறது.

(3) வர்ணாச்ரம தர்மத்திற்கும் சிஷ்டாசாரத்திற்கும் மூரணான எக்காரியத்தையும் செய்யக்கூடாதென்பதை ஒவ்வொரு வர்ணாச்ரமியையும் கேட்டுக்கொள்ளுகிறது.

(4) பிரதிமாதமும் இச்சபையைக் கூட்டவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது.

(5) மதராஸில் நடக்கப்போகும் வர்ணாச்ரம தர்ம மஹாஸபைக்கு மஹா-ா-ஶ்ரீ S. V. கணபதி அய்யரையும் ஶ்ரீமான் K. S. கந்தப்பகவுண்டர் அவர்களையும் பிரதிநிதியாகத் தேர்ந்து எடுத்தனுப்பத் தீர்மானிக்கப்பட்டது.

ராமசேஷ கனபாடிகள்,
கூகலூர்.

---

# ஆஸ்திக மஹாஜன ஸபை.

தஞ்சைஜில்லா நன்னிலம் தாலூகா செம்மங்குடி கிருமத்தில் ஆஸ்திக மஹாஜனங்களின் நன்மையைக்கோறி ப்ரபவ-ஹு கார்த்திகை-மீ 25உ (10—12—27) ஸ்திரவாரம் காலை 8-மணிக்கு ஶ்ரீவரதராஜப்பெருமாள் ஸந்நிதியில் ஆஸ்திக மஹாஜனங்களின் மஹாநாடு ஶ்ரீமான் R. பட்டாபிராமய்யர் தலைமையில் கூட்டப்பட்டு கீழ்கண்ட தீர்மானங்கள் ஏகமனதாய் தீர்மானிக்கப்பட்டது

(1) அகில இந்திய ப்ராமண மஹாஸம்மேளனத்தின் தீர்மானங்களை இம்மஹாநாடு ஆதரிக்கிறது.

(2) சென்னையில் காங்கிரஸ் வாரத்தில் வர்ணாச்ரம தர்ம மஹாநாடு கூடப்போவதாகத் தெரிந்து இம்மஹாநாடு மிகுந்தசந்தோஷமடைகிறது.

(3) ஷை மஹாநாட்டிற்குக் கீழ்கண்டவர்களை இச்சபையின் பிரதிநிதிகளாய் அனுப்பத் தீர்மானிக்கிறது.

(4) ஷை மஹாநாடு நடைபெற முயற்சி எடுத்துக்கொண்டிருக்கும் ஆஸ்திக சிரோன்மணி ஸ்ரீவத்ஸ வெ. ஸோமதேவ சர்மா அவர்களை பாராட்டுவதுடன், அம்முயற்சி நன்கு நிறைவேறும்படி ஸர்வேச்வரனைப் பிரார்த்திக்கிறது.

(5) சட்டசபைகளில் மதவிருத்தமான மசோதாக்களைக் கொண்டுவருவது மேன்மைதங்கிய விக்டோரியா மஹாராணி அவர்களின் உருதிமொழிக்கு விரோதமானதால் அவ்வித மசோதாக்களை சட்டஸபைகளில் கொண்டுவர அனுமதி கொடுக்காமலிருக்கும்படி இந்தியா கவர்மெண்டாரையும் கேட்டுக்கொள்கிறது.

(6) இப்பொழுது இந்தியா சட்டஸபையில் கொண்டுவரப்பட்டிருக்கும் விவாஹ வயது நிர்ணய மசோதாவானது ஹிந்துக்களில் பிராமணர்களுடைய மதாசாரமுறைமைக்குப்பெரும்பாலும் விரோதமாயிருப்பதால் ஷை மசோதாவை நிறைவேற்றுமலிருக்கும்படி கவர்மெண்டாரையும் சட்டஸபை அங்கத்தினர்களையும் கேட்டுக்கொள்கிறது.

(7) இந்தியா சட்டஸபையில் ஹிந்துவல்லாத ஒருவரால் கொண்டுவரப்பட்டிருக்கும் கலப்பு விவாக மசோதா நமது ஹிந்து ஸமூஹத்தில் மதாசாரப்பழக்க வழக்கங்களுக்கே விரோதமாயிருப்பதால் அதை இந்தியா சட்டஸபையில் நிறைவேற்றுமலிருக்கும்படிக்கு இந்தியா கவர்மெண்டாரையும் இந்தியா சட்டஸபையங்கத்தினர்களையும் கேட்டுக்கொள்கிறது.

[8] அவ்விதம் மதவிஷயத்தில் தலையிட சட்டஸபை ப்ரதிநிதிகளுக்கு அதிகாரமில்லையென்றும்அதிகாரமில்லாத மதவிஷயங்களில் ஹிந்துமதஸ்தர் என்று சொல்லிக்கொள்பவரோ அன்னியமதத்தி

ணரோ பிரவர்த்திப்பது அக்கிரமமென்றும் அதிகாரத்தை துஷ்பிரயோகம்செய்வதாகுமென்றும் கருதுவதுடன் அவ்விதம் மதவிஷயங்களில் இனியாவது பிரவேசியாமலிருக்கும்படி அவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறது.

(9) உண்மையான மதக்கல்வியை படிக்காமல் ஆங்கிலம் மட்டில் கற்றும் நாஸ்திகம்கொண்ட ஒரு சிலர் ஹிந்துமதத்திற்கு முக்கிய ஆதாரபூதமான மனுஸ்மிருதியைத் தூஷித்துத் தீயை வைத்ததாக அறிந்த இந்த மஹாஸபையானது ஷெ காரியத்தைக் கண்டு மிகவும் வருந்துவதுடன் இவைபோன்ற காரியங்களால் மதத்வேஷம் மேலிட்டு சச்சரவு விளையக்கூடுமாதலால் ஷெ காரியத்திற்கு ஜவாப்தாரிகளானவர்களின்பேரில் மததூஷணைக்குத் தகுந்த நடவடிக்கை எடுத்துக்கொள்ளும்படி சென்னை கவர்மெண்டாரைக் கேட்டுக்கொள்கிறது.

(10) பிராமணர் பிராமணேதார்களான ஆஸ்திகர்களான யாவரும் கும்பகோணத்தில் பிரசுரமாகும் ஆர்யதர்மம் பாரதமித்திரன் முதலிய பத்திரிகைகளையும் துவாரில் பிரசுரமாகும் ப்ராம்மணன் பத்திரிகையையும் ஆதரித்து விருத்திசெய்யவேண்டுமாய் கேட்டுக்கொள்கிறது.

(11) காங்கிரஸ்காரர்களாயுள்ளவர்கள் அனைவரும் ராஜீய விஷயம் தவிர மதவிஷயங்களில் பிரவேசித்து ஸாதுக்களான ஆஸ்திக மஹாஜநங்களின் மனஸை குழப்பிவிட்டு தொந்திரவு விளைவிக்காமலிருக்கும்படி கேட்டுக்கொள்கிறது.

இச்சபையிலிருந்து சென்னை வர்ணாச்ரம தர்ம மஹாநாட்டிற்குச் செல்லும் பிரதிநிதிகள் ஸ்ரீமான்கள்

1. R. பட்டாபிராமய்யர் அவர்கள்
2. V. R. பஞ்சாபகேசய்யர் அவர்கள்
3. S. R. சுப்பிரமணிய அய்யரவர்கள்
4. S. G. கணேசய்யர் அவர்கள்
5. M. S. சுந்தரேசய்யர் அவர்கள்
6. S. V. முத்துஸாமி அய்யரவர்கள்
7. V. நாராயணசாமி அய்யரவர்கள்,

M. S. சுந்தரேசய்யர்,

காரியதரிசி.

# விவாஹ வயது மசோதா.

மாயவரம் ப்ராம்மண ஸமாஜத்தின் ஆதரவில்,

19—11—27 சனிக்கிழமை மாலை மாயூரம் காவேரிப் பாலத்திற்கு மேல்புறம் ஸ்ரீ விசுவநாதஸ்வாமிகோவில் மண்டபத்தில், திருவனந்தபுரம் மாஜி திவான் பேஷ்கார் மஹா-ள-ஸ்ரீ N. ஸுப்ரமண்ய அய்யர் (M. A.) அவர்களுடைய அக்ராஸனத்தில் நடைபெற்ற மஹாநாட்டில், மாயவரம் T. S. நடேச சாஸ்திரியார் செய்த உபந்யாஸமும் ஏற்பட்ட தீர்மானமும்:—

இந்த மசோதா இப்பொழுது டில்லி சட்டஸபையின் ஆலோசனையில் இருந்துவருகிறது. இந்தியாவில் பெண்களுக்கு 12-வயதிற்கு முன்னும் ஆண்களுக்கு 15-வயதிற்கு முன்னும் விவாஹம்செய்தல் கிரிமினல் குற்றமாகுமென்பது இதன் கருத்து நம் தேசத்தில் பெண்கள் 12முதல் 14வயதுவரையில் ப்ரௌடையாவது அனுபவ ஸித்தம். ப்ராம்மணரல்லாத இந்துக்கள் அநேகமாய் ப்ரௌடையான பிறகுதான் பெண்களை விவாஹம் செய்து கொடுக்கிறார்கள். இதைப்பற்றி அவ்வகுப்பார்களுள் எவ்வித ஆக்ஷேபணையுமில்லை. ஸ்மிருதிகளில் சொல்லிய எட்டுவகை விவாஹங்களில் ப்ராஹ்மம் ப்ராஜாபத்யம் இவ்விருவகை விவாஹங்கள் மாத்திரந்தான் ப்ராம்மணர்களுக்குப் பொருந்தியது. மேற்கண்ட விவாஹமுறைப்படி ப்ராம்மணப் பெண்கள் ப்ரௌடையாவதற்குமுன் விவாஹம் செய்விக்கப்படவேண்டும். சுருதி என்பது வேதம் (அபௌருஷேயம்) என்பதும் ஸ்மிருதி என்பது (தர்மசாஸ்திரம்) வேதத்தின் தாத்பர்யம் என்பதும் ப்ராம்மணர்களின் துணிபு சுருதி ஸ்மிருதிகளைப் பிரமாணமாகக்கொண்டு நடந்துவரும் சொற்ப ஜநஸங்கியையாகிய 100-க்கு 3½வீதமுள்ள ப்ராம்மணர்களையும் சில மேல்ஜாதி இந்துக்களையும் இந்த மசோதா சட்டமாகச் செய்யப்பட்டால் முற்றிலும் பாதிக்கும் இந்த மசோதா சட்டஸபையிலிருப்பது பெரும்பாலாருக்குத் தெரியாது சட்டஸபை ப்ராமண மெம்பர்களாவது மற்றமெம்பர்களாவது தங்களைப் பிரதிநிதிகளாகத் தேர்ந்தெடுத்த மாகாணங்களிலுள்ள ஜநங்களுக்குத் தெரிவித்து அவர்களின் அபிப்ராயத்தைச் சட்டஸபையில் சொல்லாமல் தங்கள் ஏகதேச அபிப்பிராயத்தையே

சொல்லிவந்திருக்கிறார்கள். இந்த மசோதாவைப்பற்றி பெரும்பான்மையான ப்ராமணரல்லாத இந்துக்களாவது மற்றஜாதியார்களாவது எவ்விதத்திலும் ஆக்ஷேபிக்கப்போவதில்லை. ப்ராமணர்களுக்கு ஏற்பட்டிருக்கும் 48 ஸம்ஸ்காரங்களில் விவாகம் என்பது தேவர்கள், ரிஷிகள், பித்ருக்கள் இவர்களுக்குத் தன் கடனைத் தீர்க்க கிருஹஸ்தாச்ரமத்தை நடத்திவர ஏற்பட்ட முக்கிய ஸம்ஸ்காரமேயொழிய கேவலம் காமத்தை உத்தேசித்து மாத்திரம் செய்வதல்ல. இதற்கு கௌதம தர்மத்தில் "ஸஹதர்மசாரிணீ ஸம்யோக:" தன்னுடன்கூடி தர்மத்தைச் செய்பவளின் சேர்க்கை என்று சொல்லப்படுகிறது. விவாஹம் என்றால் ப்ராமணர்களுள் அன்றுமுதல் ஸ்திரீ புருஷ ஸங்கமம் என்று சட்டஸபையிலுள்ள ஐரோப்பியர்களும் இந்துக்களல்லாதவர்களும் ஒருக்கால் தவறாக நினைக்கலாம். ப்ராமணர்களுள் ஸ்திரீ புருஷன் சேர்க்கை பெண் பிரௌடையான சில காலத்திற்குப்பிறகு மந்திரபூர்வகமான ஒரு ஸம்ஸ்காரம். இதற்கு கர்ப்பாதானம் என்று சொல்வது.

பௌத்தமதக் கொள்கைகொண்ட மாஜி ஹைகோர்ட் ஜஸ்டிஸ் ஸதாசிவய்யரவர்கள் பாரியாளும், மிஸஸ் கஸின்ஸ் என்ற ஐரோப்பிய ஸ்திரீயும், சில சுதேச கிறிஸ்தவ ஸ்திரீகளும் மற்றும் சில ப்ராமணரல்லாத இந்து ஸ்திரீகளும், வயிற்றுப்பிழைப்பின் நிமித்தம் சில லௌகிகங்களை வஹித்துவரும் ப்ராமணர்களுடைய ஸ்திரீகளில் சிலரும் சென்னையில் ஒரு மீடிங்கு கூடி விவாஹவயது மசோதாவையும் ஸம்போகவயது நிர்ணய மசோதாவையும் அமுலுக்குக் கொண்டுவரவேண்டுமென்று தீர்மானித்துவிட்டால், இந்தத்தீர்மானந்தான் இந்தியாவிலுள்ள எல்லா வைதிக மதப்பற்றுள்ளவர்களுடைய தீர்மானம் என்று நினைக்கக்கூடுமா?

நாம் ஏற்கனவே சொல்லியபடி இந்த மசோதா ப்ராம்மணர்களைப்பற்றிய விஷயமானதால், வைதிக மதப்பற்றுள்ள ப்ராமணர்களாலும் அவர்களுடைய ஸ்திரீகளாலும் தீர்மானிக்கப்படவேண்டிய விஷயமே தவிர, இதில் மற்றவர்கள் தலையிட்டுக் கொள்ள எவ்வித நியாயமுமில்லை. இந்தியாவில் பல பாகங்களிலுமுள்ள ப்ராமணஸ்திரீகள் ஆங்காங்கு மீட்டிங்கு கூடி இதைப்பற்றி பரியாலோசித்துத் தங்கள் அபிப்ராயத்தைச் சட்டஸபைக்குத் தெரிவிக்கும்படியான அவ்வளவு நாகரீகப்படிப்பு இன்னும் இதர ஜில்லாக்களிலும், நகரங்களிலும் கிராமங்களிலுமுள்ள ப்ரா

மணஸ்திரீகளுக்கு ஏற்படவில்லை. அவ்வளவு துணிகரமான படிப்புத் தங்கள் ஸ்திரீகளுக்கு வேண்டாமென்பதுதான் வைதிக மதத்தில் பற்றுள்ள ப்ராமணர்களின் கொள்கை.

மாக்ஷிமை தங்கிய விக்டோரியா மஹாராணியார் அவர்கள் நம்முடைய மதவிஷயங்களில் பிரவேசிப்பதில்லையென்று ஏற்கனவே நமக்குச் செய்துகொடுத்திருக்கும் பிரதிக்ஞைக்கு விரோதமாக இப்பொழுது இந்துமதக்கொள்கைக்கு விரோதமான நோக்கங்கள் கொண்டவும் அவ்விஷயங்களை இன்னதென்னத் தெரிந்து கொள்ளாதவர்களுமான ப்ரம்மஸமாஜிகள், ஆர்யஸமாஜிகள், தியாஸபிஸ்டுகள் பௌத்தர்கள் ஜைனர்கள், பார்ஸிகள், ஐரோப்பியர்கள், சுதேச கிறிஸ்துவர்கள், மகம்மதியர்கள், ப்ராம்மணரல்லாத இந்துக்கள், வேதம் சாஸ்திரம் முதலியவைகளைக் கொஞ்சமேனும் அறியாது வெறுப்படைந்த ப்ராம்மணர்கள் எனப்பெயர் கொண்ட சிலர் இவர்கள் மெம்பர்களாக அடங்கிய சட்டஸபையில் சிறுபான்மையான ப்ராம்மணர்களை மாத்திரம் பாதிக்கக்கூடிய இம்மசோதாவைப்பற்றி பரியாலோசித்து மெஜாரிடி மைனாரிடி வோட்டுகளின்பேரில் தீர்மானிக்க கவர்ன்மெண்டார் இடம் கொடுத்திருப்பது மிகவும் துக்கிக்கத்தக்கதே.

இந்த மசோதாவைச் சட்டஸபையில் கொண்டுவந்திருக்கும் மிஸ்டர் ஹர்பிலாஸ் ஸர்தா என்பவர் பெண்கள் ப்ரௌடையாகி மூன்றுவருஷம் வரையில் விவாஹம் செய்யக்கூடாதென்று மனுஸ்மிருதியில் சொல்லியிருப்பதாகவும், ஆகையால் மனுவின் அபிப்ராயப்படி 16 வயது முடிவதற்குள் விவாஹம் நடத்தக்கூடாதென்றும், தன்னுடைய மசோதா எவ்விதத்திலும் மதக்கொள்கைக்கு விரோதமில்லையென்றும் சட்டஸபையில் வாதிக்கிறார். இதை ஆக்ஷேபித்து ஸமாதானம் கூற தர்மசாஸ்திரபரிசயமும் தைர்யமுமற்ற ப்ராம்மணர்களெனப் பெயருள்ள சிலர் சட்டஸபைகளில் நம்முடைய பிரதிநிதிகளென்ற பெயருடன் உட்கார்ந்துகொண்டிருக்கிறார்கள்.

(தொடரும்)

T. S. நடேச சாஸ்திரியார்,
"வால்மீகி" மாயவரம், தஞ்சாவூர் ஜில்லா.